# கள்ளக்குறிச்சி நகராட்சி

கள்ளக்குறிச்சி நகராட்சியில் மன்ற கூட்டம் 2019 மே மாதம் 28 ஆம் தேதி செவ்வாய் கிழமை காலை 11.30 மணிக்கு தனி அலுவலர் அவர்கள் தலைமையில் நகராட்சி அலுவலகத்தில் நடைபெற்ற சிறப்புக் கூட்ட நடவடிக்கைகள்.

**முன்னிலை:-** திரு. A.W.சையத் முஸ்தபா கமால், B.Sc.,
**தனி அலுவலர் / ஆணையாளர்**

## கூட்ட பொருள்கள்

### பொருள் எண்-01

கள்ளக்குறிச்சி நகராட்சியில் பணிபுரிந்து வரும் துப்புரவு பணியாளர்கள் கள்ளக்குறிச்சி நகராட்சி பகுதிகளிலுள்ள தெருக்களில் சேரும் குப்பைக் கழிவுகள், தூசி மணல்கள் சார்ந்த மற்றும் பேருந்து நிலையங்களில் சேரும் திடக்கழிவுகளை அகற்றுதல், மழைநீர் வடிகால்களில் தேங்கும் அடைப்புகளை நீக்குதல் போன்ற அத்தியாவசிய அடிப்படைப் பணிகளை சுற்றுச் சூழலுக்கு பாதிப்பு ஏற்படாதவாறு பொதுமக்களின் சுகாதாரத்திற்காக செய்து வருகின்ற துப்புரவு பணியாளர்களுக்கு அடிக்கடி உடல் நலக்குறைவு ஏற்படுவதால், இந்நகராட்சியில் பணிபுரிந்து வரும் துப்புரவு பணியாளர்களுக்கு இந்நகராட்சியின் பங்களிப்புடன் சிறப்பு ஆயுள் காப்பீட்டுத் திட்டம் செயல்படுத்த அரசை கோருவதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு**

1. தற்பொழுது பணிபுரிந்து வரும் அனைத்து துப்புரவு பணியாளர்களுக்கு சிறப்பு ஆயுள் காப்பீட்டு திட்டத்தில் செயல்படுத்திடவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண். 1660 /2019/சி1**

### பொருள் எண்-02

கள்ளக்குறிச்சி நகராட்சி அலுவலக உபயோகத்திற்கு ஆணையர் அவர்களுக்கு நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் வழியே அனைத்து நகராட்சி ஆணையர்கள் மற்றும் நகராட்சி பொறியாளர்களுக்கு (CUG) தகவல் தொடர்பு ஏற்படுத்தவும் தினசரி குறுச்செய்திகள் மற்றும் தகவல் தெரிவிக்கும் வகையில் கைபேசி எண்கள் வழங்கப்பட்டுள்ளது. அதன்படி CUG எண்ணிற்கு புதியதாக கைபேசி ஒன்று வாங்கி கொள்ளவும் அதற்கான உத்தேச செலவினம் ரூ.25,000/–க்கு (ரூபாய் இருபத்தி ஐந்தாயிரம் மட்டும்) நிர்வாக அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு**

1. அனுமதிக்கலாம்.
2. அவசரம் அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று புதியதாக கைபேசி ஒன்று வாங்கி கொள்ளவும் அனுமதிக்கலாம்.

**ந.க.எண். 899 /2019/இ1**

### பொருள் எண்-03

கள்ளக்குறிச்சி நகராட்சியில் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் இரண்டாண்டு சாதனை மலர் வெளியிட மாவட்ட ஆட்சித்தலைவர் விழுப்புரம் அவர்களின் கடிக எண்.14/செ.ம.தொ/2019, நாள் 20.02.2019 தேதியில் இரண்டாண்டு சாதனை மலர் வெளியிட அனுமதி வழங்கப்பட்டுள்ளதை தொடர்ந்து இந்நகராட்சியில் கீழ்கண்ட விவரப்படி விளம்பரம் செய்யப்பட்டுள்ளது. அதன்படி பட்டியல் தொகை கீழ்க்கண்ட விவரப்படி வழங்க மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| | | | | |
|---|---|---|---|---|
| 1 | தினமலர் | 10.03.2019 | RRA0070,10.03.2019 | ரூ.24937/– |
| 2 | தமிழ்முரசு | 01.03.2019 | 3300141732,01.03.2019 | ரூ.12000/– |
| 3 | தினகரன்<br>Kal Publication | 01.03.2019 | 3300141693,01.03.2019 | ரூ.18900/– |
| | | | மொத்தம் | ரூ.55837/– |

<u>அலுவலக குறிப்பு</u>

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று பட்டியல் தொகையினை உரிய நிறுவனத்திற்கு இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண். /2019/இ1**

## <u>பொருள் எண்-04</u>

அரசாணை எண் 19 மற்றும் 20 ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி துறை நாள்.13.02.2019ன்படி நகராட்சி, பேரூராட்சி மற்றும் ஊராட்சி துறைகளுக்கு எல்லைக்குட்பபட்ட பகுதியில் வசித்து வரும் BPL,AAY சாலையோர வியாபாரிகள் இதர வியாபாரிகள் மற்றும் வறுமைகோட்டிற்கு கீழ் வரும் மக்களின் அரசு சிறப்பு நிதியாக ரூ.2000/– வழங்க தெரிவிக்கப்பட்டுள்ளதை தொடர்ந்து இந்நகராட்சி ஆணையரின் முன்அனுமதி நாள்:27.02.2019ம் தேதிய ஒப்புதலின் படி வரபெற்ற விண்ணப்பங்களின் எண்ணிக்கை 8740 கணிணி வழியே பதிவேற்றம் செய்யவும் Online/Offline வழியே பதிவேற்ற விலைப்புள்ளி கோரப்பட்டது. வரப்பெற்ற விலைப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

| வ.எண் | விபரம் | கண்மணி சிஸ்டம்ஸ் | பாலாஜி ஜெராக்ஸ் அண்ணாநகர் | சாந்தா கலர் ஜெராக்ஸ், கள்ளக்குறிச்சி |
|---|---|---|---|---|
| 1 | AAY,BPL சாலையோர வியாபாரிகள் இதர பணிகள் வறுமை கோட்டிற்கு கீழ் உள்ள மக்களிடமிருந்து வரபெற்ற மனுக்கள் 8740 Offline பதிவேற்றம் | 15 | 12 | 8 |
| 2 | AAY,BPL சாலையோர வியாபாரிகள் இதர பணிகள் வறுமை கோட்டிற்கு கீழ் உள்ள மக்களிடமிருந்து வரபெற்ற மனுக்கள் 8740 Online பதிவேற்றம் | 20 | 15 | 10 |

<u>அலுவலக குறிப்பு</u>

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி எதிர்நோக்கி வரப்பெற்ற விலைப்பட்டியலில் குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள சாந்தா கலர் ஜெராக்ஸ், கள்ளக்குறிச்சி என்ற நிறுவனத்திற்கு குறைந்த விலைப்புள்ளி பெற்று பணி உத்தரவு வழங்கியதையும் மற்றும் செலவினம் ரூ.185320/– மேற்கொண்டதையும் மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண். 601/2019/இ1**

**<u>பொருள் எண்-05</u>**

நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், வேலூர் அவர்களின் அறிவுரைக்கிணங்க இந்நகராட்சியில் உள்ள அனைத்து வார்டுகளிலும் டெங்கு பன்றிக்காய்ச்சல் நோய்கள் மற்றும் தொற்று நோய்கள் பரவாமல் தடுக்கவும், தற்போது பாராளுமன்றத் தேர்தல் வரும் 18.04.2019ல் நடைபெற உள்ளதால் அனைத்து வாக்க சாவடிகளிலும் சுத்தம் செய்து சுகாதாரப்பணிகள் மேற்கொள்ளவும், பொதுமக்கள் அதிக அளவில் கூடும் இடங்களில் சுண்ணாம்பு நீர் மற்றும் பிளிச்சிங்பவுடர் தெளிக்கவும், மற்றும் தேர்தல் பணிக்கு உயர் அலுவலர்கள் ஆய்வு மேற்கொள்ள வருகை தருவதாலும் அனைத்து பகுதிகளிலும் சுகாதாரப்பணிகள் மேற்கொள்ள வேண்டியுள்ளதால் அதற்கு தேவையான சுண்ணாம்பு நீர் மற்றம் பிளிச்சிங் பவுடர் வாங்கி கொள்ள உத்தேச செலவினம் ரூ.5.00(ஐந்து இலட்சம் மட்டும்)நிர்வாக அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு</u>**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. அவசர அவசியம கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று Tamil Nadu Multipurpose Indco Serve Trichy என்ற நிறுவனத்தில் வாங்கி கொள்ளவும் பெறப்படும் பட்டியல் தொகைகளை வருவாய் நிதியிலிருந்து வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண். 975 /2019/எச்1**

**<u>பொருள் எண்-06</u>**

கள்ளக்குறிச்சி நகராட்சியில் வரி மற்றும் வரியில்லா இனங்களுக்கான வரிவசூல் மையத்தில் பயன்படுத்தப்படும் தொலைப்பேசி எண்.04151–222297 எண்ணிற்கு 01.07.2018 முதல் 30.09.2018 வரை, 01.10.2018 முதல் 31.12.2018 வரை மற்றும் 01.01.2019 முதல் 31.03.2019 வரையிலான காலத்திற்கு தொலைப்பேசி கட்டணம் ரூ.1,44,886/–யை செலுத்தக் கோரி நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் வேலூர், அவர்களிடமிருந்து கடிதம் வரப்பெற்றுள்ளது. மேற்காணும் தொகையினை காசோலையாக நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், வேலூர் அவர்களுக்கு அனுப்பிடவும், அதற்கான செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் ஆணையர் அவர்களின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு</u>**

1. அனுமதிக்கலாம்.
2. பணியின் அவசர அவசியம கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று AO (Cash),BSNL,TN Circle,Chennai நிறுவனத்தில் தொகை செலுத்திடவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண். 553 /2013/எச்1**

**<u>பொருள் எண்-07</u>**

கள்ளக்குறிச்சி நகராட்சி அலுவலக பயன்பாட்டில் உள்ள ஈப்பு வாகனம் எண்.TN32AV2277 என்ற வாகனத்திற்கு ஆயில் சர்வீஸ், வாட்டர் சர்வீஸ் மற்றும் இதர பழுதுகள் நீக்கம் செய்து தர கோரியுள்ளார். அதன்படி TN32AV2277 என்ற வாகனத்திற்கு அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று உள்ளூர் விலைப்புள்ளி பெற்று பணிகள் மேற்கொள்ளவும் மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு</u>**

1. அனுமதிக்கலாம்.
2. பாராளுமன்ற தேர்தல் நன்னடத்தை விதிகள் அமலில் உள்ளதால் பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று பணிகள் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண்.1188/2013/ இ1**

## பொருள் எண்-08

அலுவலக பயன்பாட்டில் இயங்கி வரும் ஈப்பு வாகனம் TN15AV2277 என்ற வாகனத்திற்கு ஆயில் சர்வீஸ், வீல் அலைன்மென்ட் மற்றும் வாட்டர் சர்வீஸ் ஆகிய பழுதுகளை நீக்கம் செய்தல் 11.04.2019 அன்று வரப்பெற்ற விலைப்புள்ளிகள் ஒப்புநோக்கு பட்டியல் பின்வருமாறு

| வ.எ ண். | விபரம் | கண்ணகி மோட்டார் ஒர்க்ஸ் | ஸ்ரீதாய் லேபர் ஆட்டோ டீசல் ஒர்க்ஸ் | ஸ்ரீவெங்கடேஷ் வரா லேபர் ஆடடோ ஒர்க்ஸ் |
|---|---|---|---|---|
| 1 | Engine Oil 6let CRB | 1800 | 1850 | 1900 |
| 2 | Oil Filter 1 Nos | 270 | 280 | 300 |
| 3 | Diesel Filter 1 No | 665 | 700 | 750 |
| 4 | Engine Oil Service Labour | 300 | 350 | 350 |
| 5 | Wheel Disk 1 No | 3000 | 350 | 350 |
| 6 | Wheel Rotation 5 tyre | 250 | 300 | 300 |
| 7 | Wheel aloyment labour | 650 | 700 | 750 |
| 8 | Water service labour | 400 | 450 | --- |

**அலுவலக குறிப்பு**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்ற விலைப்புள்ளி கோரியதையும் பணி உத்தரவு வழங்கியதையும், பெறப்படும் பட்டியல் தொகையை நகராட்சி பொது நிதியிலிருந்து வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண். 1188 /2019/இ1**

## பொருள் எண்-09

கள்ளக்குறிச்சி நகராட்சி பேரூராட்சியாக செயல்பட்ட காலத்திலேயே பொதுசுகாதாரப்பிரிவில் துப்புரவுபணியாளர்கள் 68 பணியிடங்கள் மட்டுமே தோற்றுவிக்கப்பட்டுள்ளது. தற்போது நகரின் வளர்ச்சிக்கேற்ப அரசாணை எண்.101 நாள்:-30.04.1997ன்படி இந்நகராட்சிக்கு 213 துப்புரவு பணியாளர்கள் பணியமர்த்தப்பட வேண்டும். ஆனால் இந்நகராட்சியில் தற்போது 58 துப்புரவு பணியாளர்கள் மட்டுமே பணிபுரிந்து வருகிறார்கள். இதனால் இந்நகரின் வளர்ச்சிகேற்ற வகையில் போதிய துப்புரவு பணியாளர்கள் இல்லாத காரணத்தினால், கடந்த 2005 ஆம் ஆண்டு முதல் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் 1.ரோஜா,2.துர்கா,3.மல்லிகை ஆகிய மகளிர் சுயஉதவிக்குழுக்கள் மூலம் 76 பணியாளர்களை தற்காலிகமாக பணியமர்த்தி மாவட்ட ஆட்சி தலைவர் விழுப்புரம் அவர்களின் செந்தூர விலைவிகிதப்பட்டியல் (Schedule of Rate) அடிப்படையில் தினசரி நாள் ஒன்றுக்கு ரூ.340/-வீதம் வழங்கவும், மற்றும் தொழிலாளர் வருங்கால வைப்பு நிதி சந்தா தொகை 13.36% பிடித்தம் செய்தும், நகராட்சி பங்கு தொகை 13.36%ம் சேர்த்து உரிய தலைப்பில் செலுத்திடவும் இந்நகர்மன்ற தீர்மான எண்.315/2018 நாள்:-30.09.2018 ல் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேலும், இந்நகராட்சிக்கு நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களால் துப்புரவு பணிக்கு ஒப்பந்த அடிப்படையில் 124 துப்புரவு பணியாளர்களை பணியமர்த்தி கொள்ள அனுமதி வழங்கப்பட்டுள்ளது. ஆனால் தற்போது பாராளுமன்ற தேர்தல் 2019ன் நன்னடைத்தை விதிகள் அமலில் உள்ளதால் ஒப்பந்தப்புள்ளி கோர இயலாத நிலை ஏற்பட்டுள்ளது. எனவே, பொது சுகாதார பணியின் அவசர அவசியம் கருதியும், பொது மக்களின் நலன் கருதியும், மேற்கண்ட மகளிர்

சுய உதவிக்குழுக்களை தொடந்து துப்புரவு பணிகளை மேற்கொள்ள வேண்டியது அவசியமாகிறது. எனவே, இக்குழுக்களை 01.04.2019 முதல் 31.08.2019 வரை பொது சுகாதாரப்பணிகள் மேற்கொள்ள ஆகும் உத்தேச செலவினம் ரூ.40 லட்சத்திற்கு நகராட்சி நிதியிலிருந்து மேற்கொள்ள மன்ற அனுமதிக்கு வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று பணிகள் மேற்கொண்டதையும், அதற்கான செலவினத்தை நகராடசி பொதுநிதியிலிருந்து வழங்கியதையும் மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண். 2456 /2019/எச்1**

## பொருள் எண்-10

கள்ளக்குறிச்சி நகராட்சி அலுவலக பயன்பாட்டில் உள்ள ஈப்பு வாகனம் எண்.TN15Y6671 என்ற வாகனத்திற்கு ஆடியோ சிஸ்டம் டீக்சர் செட் மற்றும் இதர பழுதுகள் ஏற்பட்டுள்ளது சரிசெய்து தர கோரியுள்ளார். அதன் படி TN15Y6671 என்ற வாககத்திற்கு அவசர அவசியம் கருதி பணிகள் செய்ய வேண்டியுள்ளதால் உள்ளூரில் விலைப்புள்ளி பெற்று பணிகள் மேற்கொள்ள மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. பாராளுமன்ற தேர்தல் நன்னடத்தை விதிகள் அமலில் உள்ளதால் பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று பணிகள் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண். 1659 /2019/இ1**

## பொருள் எண்-11

அலுவலக பயன்பாட்டில் இயங்கி வரும் ஈப்பு வாகனம் TN15Y6671 என்ற வாகனத்திற்கு ஆடியோ சிஸ்டம், ஸ்பீக்கர் செட், ஹாரன் செட், முகப்பு விளக்கு மற்றும் ஒயரிங் பணிக்கு 22.04.2019 அன்று வரப்பெற்ற விலைப்புள்ளிகள் ஒப்புநோக்கு பட்டியல் பின்வருமாறு

| வ.எ ண். | விபரம் | கண்ணகி மோட்டார் ஒர்க்ஸ் | ஸ்ரீதாய் லேபர் ஆட்டோ டீசல் ஒர்க்ஸ் | ஸ்ரீவெங்கடேஷ் வரா லேபர் ஆடடோ ஒர்க்ஸ் |
|---|---|---|---|---|
| 1 | Poineer Audio Kit 1 No | 8800 | 8900 | 8950 |
| 2 | 4” Speeker Poineer 2 Nos | 2650 | 2700 | 2900 |
| 3 | Wiring Kit 5 MM 8MM look clip conactor Main conactor | 600 | 650 | 680 |
| 4 | Audio set Fitting Labour | 650 | 700 | 750 |
| 5 | Head Lamp set Assembly | 1850 | 1900 | 1950 |

| | | | | |
|---|---|---|---|---|
| 6 | Head Light bulb 2 Nos | 290 | 280 | 300 |
| 7 | Head light Holder 1 set | 300 | 300 | 350 |
| 8 | Head lightwire kit | 590 | 600 | 650 |
| 9 | Roots horn set miniset 2 Nos | 1390 | 1400 | 1500 |
| 10 | Light Horn,Fitting labour | 590 | 600 | 650 |
| | மொத்தம் | 17710 | 18030 | 18680 |

**அலுவலக குறிப்பு**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்ற விலைப்புள்ளி கோரியதையும் பணி உத்தரவு வழங்கியதையும், பெறப்படும் பட்டியல் தொகையை நகராட்சி பொது நிதியிலிருந்து வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண். 1659/2019/இ1**

## பொருள் எண்-12

கள்ளக்குறிச்சி நகராட்சியில் ஒப்பந்ததாரர்களின் பணி பட்டியல்களில் பிடித்தம் செய்யப்படும் வருமான வரித் தொகைகளின் விவரங்கள் மற்றும் பணியாளர்களின் ஊதிய பட்டியலில் பிடித்தம் செய்யப்படும் வருமான வரித்தொகைகளின் விவரங்கள் ஆகியவைகளை 24Q மற்றும் 26Q படிவங்களாக மினனனு (E-Filling) பதிவு செய்யும் பணியானது மூன்று மாதங்களுக்கு ஒருமுறை வருமானவரித்துறைக்க பதிவேற்றம் செய்யப்படவேண்டும். இப்பணி எம்.ராஜீ அசோசியேட்ஸ், பாண்டிச்சேரி வருமானவரி தணிக்கையாளர் மூலம் மேற்கொள்ளப்பட்டுவருகிறது. இந்நிலையில் தற்போது 2012–2013, 2013–14,2017–18,2018–19 மற்றும் 2019–20–ம் ஆண்டுக்கான ஒப்பந்ததாரர்கள் மற்றும் பணியாளர்களிடமிருந்து பட்டியலில் பிடித்தம் செய்யப்படும் வருமானவரி தொகைக்கான விவரங்களை தனித்தனியாக மின்னனு (E-Filling) பதிவு செய்திட உத்தேச செலவினம் ரூ.2.00 லட்சம்(ரூபாய் இரண்டு லட்சம் மட்டும்) மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

1. அனுமதிக்கலாம்.

**ந.க.எண். 2810/2019/பி1**

## பொருள் எண்-13

கள்ளக்குறிச்சி நகராட்சிக்கு சொந்தமான தினசரி நாளங்காடியில் பயன்படுத்தி வரும் அம்மா உணவகத்தினை செயல்படுத்த தேவையான அரிசி வகைகள், மளிகை பொருட்கள், காய்கறி வகைகள், பால், சமையல் எரிவாயு, விற்பனை ரசீது புத்தகங்கள், பணிபுரியும் பணியாளர்களுக்கு ஊதியம் மற்றும் அவ்வப்போது ஏற்படும் பழுதுகள், சில்லறை செலவினம் ஆகிய அனைத்தையும் 31.03.2019 வரை பயன்படுத்தி கொள்ள இந்நகர் மன்ற தீர்மான எண்.350 நாள்:-30.11.2018 ல் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. தற்போது பாராளுமன்ற தேர்தல் 2019 நன்னடைத்தை விதிகள் அமலில் உள்ளதால் பணியின் அவசர அவசியம் கருதி மேலும், 2019-2020 ஆம் ஆண்டிற்கு (ஏப்ரல் 2019 முதல் மார்ச் 2020 வரை) மேற்கண்ட பணிகள் மேற்கொள்ள ஆகும் உத்தேச செலவினம் ரூ. 75 லட்சத்திற்கு மேற்கொள்ள மன்ற அனுமதிக்கும் வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. பணியின் அவசர அவசிய கருதி தனிஅலுவலரின் முன்னனுமதி பெற்று பணிகள் மேற்கொண்டதையும், செலவினத்தை நகராட்சி பொதுநிதியிலிருந்து வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண்.எச்1/2218/2018)**

## பொருள் எண்-14

கள்ளக்குறிச்சி நகராட்சிக்கு சொந்தமான பொது சுகாதார வாகனம் எண் TN32AU1335 என்ற வாகனத்தினை பழுது நீக்கம் செய்து தர கோரி பொது முதலாள் அரசு தானியங்கி பணிமனை விழுப்புரம் அவர்களுக்கு கடிதம் அனுப்பப்பட்டதில் பொது முதலாள் அரசு தானியங்கி பணிமனை விழுப்புரம் அவர்கள் கடிதம் எண் A2036/2019 நாள்:-**23.01.2019**ல் மேற்படி வாகனத்திற்கு பழுது நீக்கம் செய்ய உள்ளூர் விலைபுள்ளி பெற்று பணிகள் மேற்கொள்ள தெரிவிக்கப்பட்டுள்ளதால், அசோக் லேலண்ட் அங்கீகாரம் பெற்ற நிறுவனமான TVS நிறுவனம் விழுப்புரம் மூலம் பழுதுகளை நீக்கம் செய்யவும் வாகனத்தில் உள்ள பழுதுகளை நீக்கம் செய்து தொகை ரூ.**138776**/-வழங்கவும் செலவினத்தொகை நகராட்சி வருவாய் நிதிலிருந்து மேற்கொள்ளவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. அவசர அவசியம் கருதி தனிஅலுவலரின் முன்அனுமதி பெற்று TVS விழுப்புரம் நிறுவனத்திற்கு உத்தரவு வழங்கியதையும், பட்டியல் தொகை வழங்கியதையும் மன்றம் அனுமதிக்கலாம்

**(ந.க.எண்.2446 /2018/எச்1)**

## பொருள் எண்-15

கள்ளக்குறிச்சி நகராட்சியில் பொது சுகாதார வாகனம் எண்.TATA ACE TN15S7421 என்ற வாகனத்திற்கு புதியதாக இரண்டு சக்கரம் வாங்குவதற்கு தற்போது பாராளுமன்ற தேர்தல் **2019** நன்னடைத்தை விதிகள் அமலில் இருப்பதால் உள்ளூர் விலைப்புள்ளி கோரவோ, ஒப்பந்தப்புள்ளி கோரவோ இயலாத நிலையில் உள்ளதால் மேற்படி வாகனத்திற்கு MRF அங்கீகாரம் பெற்ற பாத்திமா டயர் வேர்ல்டு, கள்ளக்குறிச்சி என்ற நிறுவனத்திடம் பெற்று கொள்ளவும், பெறப்படும் பட்டியல் தொகையினை வழங்கவும் மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. பொது சுகாதார அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று MRF அங்கீகாரம் பெற்ற **பாத்திமா டயர் வேர்ல்டு,கள்ளக்குறிச்சி** என்ற நிறுவனத்திற்கு பணி உத்திரவு வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம்.
3. பெறப்படும் பட்டியல் தொகையினை நகராட்சி பொது நிதியிலிருந்து வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண்.எச்1/1790 /2019)**

## பொருள் எண்-16

கள்ளக்குறிச்சி நகராட்சியில் குடிநீர் திட்டம் **2018–2019**ன் கீழ் குடிநீர் குழாய் வீட்டு இணைப்புகள் வழங்கிடும் **(7190** இணைப்புகள்**)** பணி மேற்கொள்வதற்கான மறு ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு விளம்பரத்தினை தமிழ்நாடு மாநில அளவில் ஒரு தமிழ் தினசரி நாளிதழ் (All Editions in the State) மற்றும் ஒரு ஆங்கில தினசரி நாளிதழ் (All Editions in the State)ல் செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், சென்னை அவர்களின் மூலமாக பிரசுரம் செய்ய கோரப்பட்டதில் **05.03.2019** அன்று மாலைமலர் மற்றும் நியூ இந்தியன் எக்ஸ்பிரஸ் ஆகிய நாளிதழ்களில் பிரசுரம் செய்யப்பட்டதற்கான தொகை ரூ.**69,410/–**ஐ வழங்கக் கோரி M/S கிராபிக் ஆர்ட்ஸ் இன்டஸ்ட்ரீஸ் என்ற நிறுவனத்தாரின் பட்டியல் எண்.**3400** நாள் **05.03.2019**ல் பட்டியல் பெறப்பட்டுள்ளது. மேற்படி பட்டியல் தொகையினை M/S கிராபிக் ஆர்ட்ஸ் இன்டஸ்ட்ரீஸ் என்ற நிறுவனத்தாருக்கு வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-**

1. அனுமதிக்கலாம்.
2. தொகையினை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் அனுமதிக்கலாம்.

3. தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று பட்டியல் தொகையினை வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண்.777/2018/இ1)**

## பொருள் எண்-17

கள்ளக்குறிச்சி நகராட்சியில் குடிநீர் திட்டம் 2018–2019ன் கீழ் குடிநீர் குழாய் வீட்டு இணைப்புகள் வழங்கிடும் (7190 இணைப்புகள்) பணி மேற்கொள்வதற்கான ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு விளம்பரத்தினை தமிழ்நாடு மாநில அளவில் ஒரு தமிழ் தினசரி நாளிதழ் (All Editions in the State) மற்றும் ஒரு ஆங்கில தினசரி நாளிதழ் (All Editions in the State)ல் செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், சென்னை அவர்களின் மூலமாக பிரசுரம் செய்ய கோரப்பட்டதில் 20.01.2019 அன்று தினகரன் மற்றும் நியூ இந்தியன் எக்ஸ்பிரஸ் ஆகிய நாளிதழ்களில் பிரசுரம் செய்யப்பட்டதற்கான தொகை ரூ.1,32,405/–ஐ வழங்கக் கோரி M/S கிராபிக் ஆர்ட்ஸ் இன்டஸ்ட்ரீஸ் என்ற நிறுவனத்தாரின் பட்டியல் எண்.3238 நாள் 21.01.2019ல் பட்டியல் பெறப்பட்டுள்ளது. மேற்படி பட்டியல் தொகையினை M/S கிராபிக் ஆர்ட்ஸ் இன்டஸ்ட்ரீஸ் என்ற நிறுவனத்தாருக்கு வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-**

1. அனுமதிக்கலாம்.
2. தொகையினை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் அனுமதிக்கலாம்.
3. தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று பட்டியல் தொகையினை வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண்.777/2018/இ1)**

## பொருள் எண்-18

கள்ளக்குறிச்சி நகராட்சியில் இரண்டாண்டு சாதனை மலர் வெளியிட தெரிவிக்கப்பட்டுள்ளதை தொடர்ந்து கள்ளக்குறிச்சி நகராட்சியில் 2017–2018, 2018–2019ம் ஆண்டுக்கான இரண்டாண்டு சாதனை மலர் வெளியிடப்பட்டுள்ளது. அதன்படி தினமணி நாளிதழில் 09.03.2019ல் தினசரி நாளிதழில் வெளியிடப்பட்டு Express Publications (Madurai) Priv ate Limited என்ற நிறுவனத்தின் மூலம் பட்டியல் எண்.TN11070389 நாள் 10.03.2019ல் வரப்பெற்ற கடித்தில் பட்டியல் தொகை ரூ.16,000/– வழங்க மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-**

1. மன்றம்அனுமதிக்கலாம்.
2. வரப்பெற்ற பட்டியல் தொகையினை தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று படடியல் தொகையினை வருவாய் நிதியிலிருந்து வழங்கவும் மனறம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண்.777/2018/இ1)**

## பொருள் எண்-19

கள்ளக்குறிச்சி நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.10ல் உள்ள துருகம் சாலையில் நகராட்சிக்கு சொந்தமான மயானத்தில் 2 எண்ணிக்கையில் நுண்ணுயிரு இயற்கை உரக்களம் அமைக்கப்பட்டுள்ளது. மேற்படி இடத்திற்கு மின் இணைப்பு வழங்க கோரப்பட்டதில் உதவி பொறியாளர் தமிழ்நாடு மின்சார வாரியம் கள்ளக்குறிச்சி அவர்களின் கடித எண்.028/2019 நாள் 14.05.2019ல் வரப்பெற்ற கடிதம் மன்றத்தின் பார்வைக்க வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. அவசர அவசியம் கருதி தனிஅலுவலரின் முன்அனுமதி பெற்று பட்டியல் தொகை வழங்கியதையும் மன்றம் அனுமதிக்கலாம்

**(ந.க.எண். /2019/இ1)**

## பொருள் எண்-20

கள்ளக்குறிச்சி நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.01 முதல் 11 வரையுள்ள பகுதிகளில் அமைந்துள்ள மின் மோட்டார்களை பழுது நீக்கம் செய்யும் பணிகளுக்கு தனி அலுவலர் அவர்களின் முன்னனுமதி நாள் 10.09.2019ல் (தீர்மான எண்.349/2018 நாள் 30.11.20180 ரூ.9.00 இலட்சத்திற்கு நிர்வாக அனுமதி பெறப்பட்டு, ஒப்பந்தப்புள்ளிகள் கோரி 0.31ரூ மதிப்பீட்டை விட குறைவாக ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள, கலை இன்ஜினியரிங் ஒர்க்ஸ் கள்ளக்குறிச்சி என்பவருக்கு பணி உத்தரவு வழங்கி, பழுது நீக்கப் பணிகள் மேற்கொள்ளப்பட்டது. அன்னாருக்கு 12/2018 ல் வழங்கப்பட்ட தொகையில் ரு.9,99,429/–க்கு பழுது நீக்க பணிகள் மேற்கொள்ளப்பட்டு கலை இ ன்ஜினியரிங் ஒர்க்ஸ் கள்ளக்குறிச்சி என்ற நிறுவனத்திற்கு 9,00,000/–க்கான பட்டியல் தொகை வழங்கப்பட்டுள்ள நிலையில் கூடுதலாக மேற்கொள்ளப்பட்டுள்ள பணிகளுக்கான பட்டியல் தொகை ரூ.99,429/–யை கலை இன்ஜினியரிங் ஒர்க்ஸ் கள்ளக்குறிச்சி என்பவர் கொடுத்துள்ள 0.31ரூ மதிப்பீட்டைவிட குறைவான ஒப்பந்தப்புள்ளி விலை விகிதத்திலேயே பழுது நீக்கப்பணிகள் மேற்கொள்வதற்கும், அதற்கான உத்தேச செலவின தொகை ரூ.1,15,000/–(ரூபாய் ஒருஇலட்சத்து பதினைந்தாயிரம் மட்டும்) க்கு தனி அலுவலர் அவர்களின் நிர்வாக அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:–**

1. தனி அலுவலர் அவர்கள் அனுமதிக்கலாம்.
2. மேற்காணும் ஒப்பந்தப்புள்ளி எடுத்துள்ள ஒப்பந்ததாரர் கலை இ ன்ஜினியரிங் ஒர்க்ஸ் கள்ளக்குறிச்சி என்பவரின் சம்மத கடிதம் பெற்று பணியினை மேற்கொள்ளவும் அனுமதிக்கலாம்.
3. குடிநீர் விநியோக பணியின் அவசர அவசியத்தினை கருத்தில் கொண்டு தனி அலுவலர் அவர்களின் முன்னனுமதி பெற்று, பழுது நீக்கப் பணிகள் மேற்கொள்ளவும் அனுமதிக்கலாம்.
4. கேட்பு தொகையினை நகராட்சி வருவாய் அல்லது குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண். 1412/2019/இ1)**

## பொருள் எண்-21

கள்ளக்குறிச்சி நகராட்சியில் பொது சுகாதார வாகனம் எண்.TATA ACE TN15S7454 என்ற வாகனத்திற்கு புதியதாக இரண்டு சக்கரம் வாங்குவதற்கு தற்போது பாராளுமன்ற தேர்தல் 2019 நன்னடைத்தை விதிகள் அமலில் இருப்பதால் உள்ளூர் விலைப்புள்ளி கோரவோ, ஒப்பந்தப்புள்ளி கோரவோ இயலாத நிலையில் உள்ளதால் மேற்படி வாகனத்திற்கு MRF அங்கீகாரம் பெற்ற பாத்திமா டயர் வேர்ல்டு, கள்ளக்குறிச்சி என்ற நிறுவனத்திடம் பெற்று கொள்ளவும், பெறப்படும் பட்டியல் தொகையினை வழங்கவும் மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. பொது சுகாதார அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று MRF அங்கீகாரம் பெற்ற **பாத்திமா டயர் வேர்ல்டு,கள்ளக்குறிச்சி** என்ற நிறுவனத்திற்கு பணி உத்தரவு வழங்கியதை மன்றம் அங்கீகரிக்கலாம்.
3. பெறப்படும் பட்டியல் தொகையினை நகராட்சி பொது நிதியிலிருந்து வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண்.எச்1/2134 /2019)**

## பொருள் எண்-22

விழுப்புரம் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் கடித எண்.2700/ஆ6/2018 நாள் 04.02.2018 செயல் முறை உத்தரவில் கள்ளக்குறிச்சி நகராட்சிக்கு 25.00 இலட்சம் மதிப்பீட்டில் கா.மாமனந்தல் ஏரியில் திறந்த வெளி கிணறு அமைக்க ஒப்புதல வழங்கப்பட்டுள்ளதை தொடர்ந்து இந்நகராட்சி 21.02.2019 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரி தினகரன் நாளிதழிலில் 17.02.2019ல் பிரசுரம் செய்யப்பட்டுள்ளது. அதற்கான பட்டியல் தொகை ரூ.7610/– பட்டியல் எண்.3300138913 நாள் 17.02.2019ன்படி பட்டியல்

சமர்ப்பித்து மேற்படி பட்டியல் தொகையினை வருவாய் நிதியிலிருந்து வழங்க மன்றம் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு

1. மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண்.3716/2019/இ1)**

## பொருள் எண்-23

கள்ளக்குறிச்சி நகராட்சியில் 2011 ஆம் ஆண்டின் மக்கள் தொகை கணக்கெடுப்பின் படி 52507 ஆகும். இந்நகராட்சியில் 21 வார்டுகள் உள்ளது.இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டுகளில் இரண்டாம் நிலை சேகரமான குப்பைகளை சேகரிக்க கடந்த 2009 ஆம் ஆண்டு முதல் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் 1 டம்பர் பிளேசர்(TN32 P3612) வாகனமும், IUDM 2011-2012 திட்டத்தின் கீழ்1 டம்பர் பிளேசர் (TN 32 AU1335) வாகனங்களை இந்நகரப்பகுதியில் 56 பின்கள் கொண்டு பயன்படுத்தப்பட்டு வருகிறது.

தற்போது திடக்கழிவு மேலாண்மை திட்டம் 2016 ன் துணை விதிகளின் படி தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் இந்நகரில் தினசரி உருவாகும் சுமார் 20 MT குப்பைகளை தரம் பிரித்து அண்ணாநகர், துருகம்சாலை மயான பகுதியில் அமைக்கப்பெற்ற மொத்தம் 3 நுண்ணுயிர் உரகிடங்கும் (MCC), மேலும் நகரில் 12 இடங்களில் அமைக்கப்பட்ட (குப்பை உருவாகும் இடத்திலேயே உரமாக்குதல்) பணி மேற்கொள்ள வேண்டியும் (OCC), குப்பைகளை சேகரிக்க தற்போது 27 மின்கலனில் இயங்கும் வாகனம் (BOV) மற்றும் 2 இலகுரக வாகனம் (LCV) வாகனங்களை பயன்படுத்தி பணி நடைபெற்று வருகிறது, மேலும் 3 இலகுரக வாகனம் வர உள்ளது.

இந்நகராட்சியில் உரங்கிடங்கில் BIO MINING பணி மேற்கொள்வதால் இங்குள்ள குப்பைகளையும் சுத்தம் செய்யும் பணி நடைபெறுவதோடு, இனி வருங்காலங்களில் இரண்டாம் நிலை சேகரிப்பு பணி முற்றிலும் தவிர்க்கப்பட்டு நகராட்சி உரக்கிடங்கிற்கு குப்பை கொண்டு செல்வது நிறுத்தப்படும்.மேலும், குப்பை தொட்டியில்லா நகரமாக மாற்றும் பணி நடைபெறுவதாலும் மேற்கண்ட டம்பர் பிளேசர் வாகனங்களின் பணிகள் முற்றிலும் வரும் காலங்களில் பயன்படுத்த இயலாத நிலை ஏற்படும் என்பதால் இரண்டு டம்பர்பிளேசர் வாகனங்களின் பயன்பாடு இல்லாமல் தவிர்க்கும் பொருட்டு இந்நகராட்சியின் அத்தியாவசிய தேவையான குடிநீர் லாரி மற்றும் கழிவுநீர் தொட்டி சுத்தம் செய்யும் லாரி (Septic Tank) இந்நகராட்சியில் இல்லை என்பதால், மேற்கண்ட இரு டம்பர்பிளேசர் வாகனங்களில் ஒன்றை குடிநீர் டேங்கர் லாரியாகவும் (Water Tank lorry), கழிவுநீர் தொட்டி சுத்தம் செய்யும் லாரியாகவும் (Septic Tank lorry) மாற்றி பயன்படுத்திக்கொள்ள அனுமதி வேண்டி நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களுக்கு கருத்துரு அனுப்ப மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு**

1.மன்றம் அனுமதிக்கலாம்

2.மேற்கண்ட டம்பர்பிளேசர் வாகனங்களை குடிநீர் டேங்கர் லாரியாகவும், கழிவு நீர் தொட்டி சுத்தம் செய்யும் லாரியாகவும் TVS நிறுவனம் மூலம் மாற்றி பயன்படுத்திகொள்ளவும் அதற்காகும் செலவினத்தையும் பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண். 2136 /2019/ எச்1)**

## பொருள் எண்-24

கள்ளக்குறிச்சி நகராட்சிக்கு சொந்தமான 6 எண்ணம் ஆண்டு குத்தகை இனங்களை 01.04.2018 முதல் 31.03.2021 முடிய உள்ள காலத்திற்கு உரிமம் அனுமதித்து கொள்ள இந்நகர்மன்ற தீர்மான எண் 183 நாள்:-20.12.2017ல் அனுமதி வழங்கப்பட்டுள்ளதை தொடர்ந்து பொது ஏலம் மூலம் 01.04.2018 முதல் உரிமம் அனுபவிக்க ஒப்படைக்கப்பட்டது. இதில் கீழ்க்கண்ட இரண்டு உரிம இனங்கள் 2018-19 ஆம் ஆண்டிற்கான உரிமத்தொகையை செலுத்தாமல் இருந்தமையால் உரிமத்தினை ரத்து செய்து, 2019 பாராளுமன்ற தேர்தல் நன்னடைத்தை விதிகள் அமலில் இருந்ததால் பொது ஏலம் தவிர்த்து 01.04.2019 முதல் நிர்வாக நலன் கருதி துறைரீதியாக வசூலிக்கப்பட்டு வருகிறது.

| வ.எண் | இனங்கள் | ஏலத்தொகை | 2018-2019 ஆம் |
|---|---|---|---|

| | | | |
|---|---|---|---|
| | | | ஆண்டிற்கான நிலுவை தொகை (வருமான வரியுடன்) |
| 1 | நாளங்காடி / சாலையோர கடைகளில் சுங்கம் வசூலிக்கும் உரிமம் | 5005000/- | 2560050/- |
| 2 | தினசரி நாளங்காடியில் உள்ள கட்டண கழிப்பறையில் கட்டணம் வசூலிக்கும் உரிமம் | 310000/- | 163000/- |

தற்போது 2019 பாராளுமன்ற தேர்தல் நடத்தை விதிகள் 27.05.2019வுடன் தளர்வு செய்யப்பட்டதால் மேற்கண்ட இரண்டு இனத்திற்கும் பொது ஏலம் ஒப்பந்தப்புள்ளி கோர மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலககுறிப்பு**

1. 01.04.2019 முதல் மேற்கண்ட இரண்டு இனத்தையும் துறைரீதியாக சுங்கவசூல் மேற்கொண்ட நடவடிக்கைக்கு மன்றம் அங்கீகரிக்கலாம்.
2. நாளங்காடி /சாலையோர கடைகளில் சுங்கம் வசூலிக்கும் உரிமத்திற்கான சொத்து மதிப்பு சான்று ரூ.500000/- லிருந்து ரூ.2500000/- மாக உயர்த்தலாம்.
3. நாளங்காடி /சாலையோர கடைகளில் சுங்கம் வசூலிக்கும் உரிமத்திற்கான சொத்து மதிப்பு உள்ளவர்கள் செலுத்த வேண்டிய வைப்பு தொகை ரூ.300000/- லிருந்து ரூ.500000/- உயர்த்தலாம்.
4. நாளங்காடி /சாலையோர கடைகளில் சுங்கம் வசூலிக்கும் உரிமத்திற்கான சொத்து மதிப்பு இல்லாதவர்கள் செலுத்த வேண்டிய வைப்பு தொகை ரூ.500000/- லிருந்து ரூ.1000000/- உயர்த்தலாம்.
5. மேற்கண்ட இரண்டு இனத்தையும் பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோர மன்றம் அனுமதிக்கலாம்.
6. மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிகள் கோரும் நடவடிக்கையினை நாளிதழில் விளம்பரம் செய்யவும் அதற்கான செலவினத்தையும் மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண்.3111/2017/அ2)**

**<u>பொருள் எண்-25</u>**

கள்ளக்குறிச்சி நகராட்சிக்கு சொந்தமான 6 எண்ணம் ஆண்டு குத்தகை இனங்களை 01.04.2018 முதல் 31.03.2021 முடிய உள்ள காலத்திற்கு உரிமம் அனுமதித்து கொள்ள இந்நகர்மன்ற தீர்மான எண் 183 நாள்:-20.12.2017ல் அனுமதி வழங்கப்பட்டுள்ளதை தொடர்ந்து பொது ஏலம் மூலம் 01.04.2018 முதல் உரிமம் அனுபவிக்க ஒப்படைக்கப்பட்டது. இதில் கீழ்க்கண்ட இரண்டு உரிம இனங்கள் 2018-19 ஆம் ஆண்டிற்கான உரிமத்தொகையை செலுத்தாமல் இருந்தமையால் உரிமத்தினை ரத்து செய்து, 2019 பாராளுமன்ற தேர்தல் நன்னடைத்தை விதிகள் அமலில் இருந்ததால் பொது ஏலம் தவிர்த்து 01.04.2019 முதல் நிர்வாக நலன் கருதி துறைரீதியாக வசூலிக்கப்பட்டு வருகிறது.

| வ.எண் | இனங்கள் | உரிமதார் பெயர் மற்றும் முகவரி | ஏலத்தொகை | 2018-2019 ஆம் ஆண்டிற்கான நிலுவை தொகை (வருமான வரியுடன்) |
|---|---|---|---|---|
| 1 | நாளங்காடி / சாலையோர கடைகளில் சுங்கம் வசூலிக்கும் உரிமம் | திரு.கா.முருகேசன் த/பெ காசிநாதன் 67சி,தென்கீரனூர் ரோடு ஏமப்பேர்,கள்ளக்குறிச்சி | 5005000/- | 2560050/- |

| | | | | |
|---|---|---|---|---|
| 2 | தினசரி நாளங்காடியில் உள்ள கட்டண கழிப்பறையில் கட்டணம் வசூலிக்கும் உரிமம் | திரு.ம.பாஸ்கர் த/பெ மகாலிங்கம் 25-ஏ/1,சிறுவங்கூர் ரோடு,கள்ளக்குறிச்சி | 310000/- | 163000/- |

மேற்கண்ட உரிமதாரர்கள் செலுத்திய வைப்புதொகைகளை பறிமுதல் செய்தும் நகராட்சிக்கு செலுத்த வேண்டிய நிலுவை தொகைகளை சம்மந்தப்பட்டவர்களிடம் நீதிமன்றம் மூலம் வழக்கு தொடர்ந்து சட்டரீதியாக வசூல் செய்ய மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலககுறிப்பு**

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. மேற்படி நீதிமன்றம் வழக்கு தொடர்வதற்கான செலவினத்தையும் மன்றம் அனுமதிக்கலாம்

**(ந.க.எண்.3111/2017/அ2)**

## பொருள் எண்-26

கள்ளக்குறிச்சி நகராட்சிக்கு சொந்தமான 6 எண்ணம் ஆண்டு குத்தகை இனங்களை 01.04.2018 முதல் 31.03.2021 முடிய உள்ள காலத்திற்கு உரிமம் அனுமதித்து கொள்ள இந்நகர்மன்ற தீர்மான எண் 183 நாள்:-20.12.2017ல் அனுமதி வழங்கப்பட்டுள்ளதை தொடர்ந்து பொது ஏலம் மூலம் 01.04.2018 முதல் உரிமம் அனுபவிக்க 5 எண்ணம் இனங்களை இந்நகராட்சி மன்ற தீர்மான எண் 208/2018 நாள் 28.02.2018 ல் ஒப்படைக்கப்பட்டது. இதில் பேருந்துநிலைய தொலைக்காட்சி விளம்பரம் செய்தல் உரிமம் இனம் பொது ஏலம் கோரப்பட்டு ஏலம் கோர யாரும் முன்வரவில்லை.

2018–2019ம் ஆண்டில் உரிமத் தொகை நிலுவை வைத்ததால் ரத்து செய்யப்பட்ட நாளங்காடி சாலையோர கடைகளில் சுங்கம் வசூலிக்கும் உரிமம், தினசரி நாளங்காடியில் உள்ள கட்டண கழிப்பறையில் கட்டணம் வசூலிக்கும் உரிமம் மற்றும் பேருந்து நிலையத்தில் உள்ள நடைபாதையில் தொலைகாட்சி பெட்டி வைத்து விளம்பரம் செய்தல் ஆகியவற்றையும் சேர்த்து கீழ்க்கண்ட விபரப்படி 2019–2020ம் ஆண்டிற்கான பொதுஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளிகள் கோர மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

| வ. எ | ஏல இனம் | 01.04.2019க்கு பிறகு பெறப்பட்ட சொத்து அசல் மதிப்பு சான்று ரூ. | அசல் சொத்து மதிப்பு உள்ளவர்கள் செலுத்த வேண்டிய வைப்பு தொகை | சொத்து மதிப்பு அசல் சான்று இல்லாதவர்கள் செலுத்த வேண்டிய வைப்பு தொகை ரூ. |
|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 |
| 1 | நாளங்காடி / சாலையோர கடைகளில் சுங்கம் வசூலிக்கும் உரிமம் | **25,00000/-** | **5,00000/-** | **10,00,000/-** |
| 2 | தினசரி நாளங்காடியில் உள்ள கட்டண கழிப்பறையில் கட்டணம் வசூலிக்கும் உரிமம் | **2,00,000/-** | **1,00,000/-** | **1,75,000/-** |
| 3 | பேருந்து நிலையத்தில் உள்ள நடைபாதையில் தொலைகாட்சி பெட்டி வைத்து விளம்பரம் செய்தல் | **2,00,000/-** | **50,000/-** | **1,00,000/-** |

**அலுவலககுறிப்பு**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிகள் கோரும் நடவடிக்கையினை நாளிதழில் விளம்பரம் செய்யவும் அதற்கான செலவினத்தையும் மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண்.3111/2017/அ2)**

**பொருள் எண்-27**

கள்ளக்குறிச்சி நகராட்சியில், **மாநில பேரிடர் மேலாண்மை நிதி 2019-**ம் ஆண்டிற்கு, கீழ்க்காணும் பணிகள் மேற்கொள்வதற்கு 11.06.2019 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் விபரத்தினை தனி அலுவலர் அவர்களின் முடிவிற்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | வேலையின்பெயர் | மதிப்பீடு தொகை ரூ. | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விலை |
|---|---|---|---|---|
| 1. | மிளகாய்தோட்டம் பகுதியில் புதியதாக ஆழ்துளை கிணறு அமைத்து மின் மோட்டார் பொருத்தி குடிநீர் விநியோகம் செய்தல் (வார்டு எண். 01) | ரூ. 2,50,000/- | M/s. J.P. கன்ஸ்ட்ரக்ஷன்ஸ், கள்ளக்குறிச்சி | 0.94 % மதிப்பீட்டிற்கும் குறைவு |
| | | | திருமதி. S.பத்மா, கள்ளக்குறிச்சி | 1.60 % மதிப்பீட்டிற்கும் அதிகம் |
| 2. | சங்கராபுரம் சாலையில் புதியதாக ஆழ்துளை கிணறு அமைத்து மின் மோட்டார் பொருத்தி குடிநீர் விநியோகம் செய்தல் (வார்டு எண். 07) | ரூ. 2,50,000/- | திரு. N.கணேசன், கள்ளக்குறிச்சி | 1.12 % மதிப்பீட்டிற்கும் குறைவு |
| | | | M/s. ஸ்ரீ கன்ஸ்ட்ரக்ஷன்ஸ், கள்ளக்குறிச்சி | 1.16 % மதிப்பீட்டிற்கும் அதிகம் |
| 3. | ஏமப்பேர் தென்கீரனூர் சாலையில் புதியதாக ஆழ்துளை கிணறு அமைத்து மின் மோட்டார் பொருத்தி குடிநீர் விநியோகம் செய்தல் (வார்டு எண். 13) | ரூ. 2,50,000/- | திரு. J.முஸ்தபா, கள்ளக்குறிச்சி | 0.59 % மதிப்பீட்டிற்கும் குறைவு |
| | | | M/s. வி.ஆர். சாமி கன்ஸ்ட்ரக்ஷன்ஸ் & பில்டர்ஸ், கள்ளக்குறிச்சி | 3.11 % மதிப்பீட்டிற்கும் அதிகம் |
| 4. | சுமங்கலி நகரில் புதியதாக ஆழ்துளை கிணறு அமைத்து மின் மோட்டார் பொருத்தி குடிநீர் விநியோகம் செய்தல் (வார்டு எண். 16) | ரூ. 2,50,000/- | திருமதி. S.பத்மா, கள்ளக்குறிச்சி | 0.59 % மதிப்பீட்டிற்கும் குறைவு |
| | | | M/s. J.P. கன்ஸ்ட்ரக்ஷன்ஸ், கள்ளக்குறிச்சி | 2.41 % மதிப்பீட்டிற்கும் அதிகம் |

**அலுவலக குறிப்பு**

1. தனி அலுவலர் அனுமதிக்கலாம்.
2. மேற்காணும் ஒப்பந்தப்புள்ளிகளில், மதிப்பீட்டைவிட குறைவான ஒப்பந்தப்புள்ளிகள் கொடுத்துள்ள ஒப்பந்ததாரர்களின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று தனி அலுவலர் அவர்கள் அனுமதிக்கலாம்.
3. குடிநீர் விநியோக பணிகளின் அவரச, அவசியத்தினை கருத்தில் கொண்டு தனி அலுவலர் அவர்களின் முன்னனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கியதையும் அனுமதிக்கலாம்.

**( ந.க.எண். 2425 / 2019 / இ1 )**

**பொருள் எண்-28**

கள்ளக்குறிச்சி நகராட்சியில், **வருவாய் நிதி மற்றும் குடிநீர் நிதி 2019-2020-**ம் ஆண்டிற்கு, கீழ்க்காணும் விபரப்படி உள்ள பணிகள் மேற்கொள்வதற்கு தயார் செய்யப்பட்ட உத்தேச மதிப்பீடு தொகைகள் தனி அலுவலர் அவர்களின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | வேலையின்பெயர் | மதிப்பீடு தொகை |
|---|---|---|
| 1. | நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண். 01 முதல் 11 வரையுள்ள பகுதிகளில் அமைந்துள்ள சிறுமின் விசைப்பம்புகள், விசைப்பம்புகள் பழுது நீக்கம் செய்தல் | ரூ. 9,95,000/- |
| 2. | நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண். 12 முதல் 21 வரையுள்ள பகுதிகளில் அமைந்துள்ள சிறுமின் விசைப்பம்புகள், விசைப்பம்புகள் பழுது நீக்கம் செய்தல் | ரூ. 9,95,000/- |
| 3. | நகராட்சிக்கு குடிநீர் விநியோக உபகரணங்கள் கொள்முதல் செய்தல் | ரூ. 9,90,000/- |
| 4. | நகராட்சி குடிநீர் விநியோக பணிக்கு திரவ குளோரினேஷன் (Liquid Cholorination) (33%) கொள்முதல் செய்தல் | ரூ. 4,00,000/- |
| 5. | நகராட்சி அலுவலகத்தில் (Septic Tank) கழிவுநீர் சேகரமாகும் தொட்டி கட்டுதல் | ரூ. 2,25,000/- |
| 6. | நகராட்சிக்கு தெருமின் விளக்கு பராமரிப்பிற்கு உபகரணங்கள் கொள்முதல் செய்தல் | ரூ. 9,00,000/- |
| 7. | ஏமப்பேர் பேருந்து நிறுத்தம் அருகில் உள்ள திறந்தவெளி கிணற்றுக்கு அருகில் புதியதாக 2 எண்ணிக்கை ஆழ்துளை கிணறு அமைத்து மோட்டார் பொருத்தி குடிநீர் குழாய்கள் அமைத்தல் | ரூ. 7,00,000/- |

மேற்காணும், விவரப்படி உள்ள பணிகளுக்காக தயார் செய்யப்பட்ட உத்தேச மதிப்பீடு தொகைகளுக்கு தனி அலுவலர் அவர்களின் நிர்வாக அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

1. தனி அலுவலர் அவர்கள் அனுமதிக்கலாம்.
2. மேற்காணும் பணிகளின் அவசர, அவசியத்தினை கருதி உடனடியாக மேற்கொள்ள வேண்டியுள்ளதால், தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதையும் அனுமதிக்கலாம்.
3. தொகையினை நகராட்சி வருவாய் மற்றும் குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண். 2737/ 2019 / இ1 )**

**பொருள் எண்-29**

கள்ளக்குறிச்சி நகராட்சியில், **குடிநீர் நிதி 2019-2020-**ம் ஆண்டிற்கு, கீழ்க்காணும் விபரப்படி உள்ள பணிகள் மேற்கொள்வதற்கு தயார் செய்யப்பட்ட உத்தேச மதிப்பீடு தொகைகள் தனி அலுவலர் அவர்களின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | வேலையின்பெயர் | மதிப்பீடு தொகை |
|---|---|---|
| 1. | பெரிய ஏரியில் புதியதாக 3 எண்ணிக்கை ஆழ்துளை கிணறு அமைத்து மோட்டார் பொருத்தி கிணற்றுக்கு இணைப்பு வழங்குதல் | ரூ. 8,00,000/- |
| 2. | கள்ளக்குறிச்சி பெரிய ஏரியிலிருந்து ராஜா நகர் மேல்நிலை நீர்த்தேக்க தொட்டிக்கு குடிநீர் பிரதான குழாய் அமைத்தல் | ரூ. 8,75,000/- |

மேற்காணும், விவரப்படி உள்ள பணிகளுக்காக தயார் செய்யப்பட்ட உத்தேச மதிப்பீடு தொகைகளுக்கு தனி அலுவலர் அவர்களின் நிர்வாக அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>

1. தனி அலுவலர் அவர்கள் அனுமதிக்கலாம்.
2. மேற்காணும் பணிகளின் அவசர, அவசியத்தினை கருதி உடனடியாக மேற்கொள்ள வேண்டியுள்ளதால், தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதையும் அனுமதிக்கலாம்.
3. தொகையினை நகராட்சி வருவாய் மற்றும் குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் அனுமதிக்கலாம்.

**( ந.க.எண். 2738/ 2019 / இ1 )**

## <u>பொருள் எண்-30</u>

கள்ளக்குறிச்சி நகராட்சி எல்லைக்குட்பட்ட அனைத்து வார்டு பகுதிகளிலும் குடிநீர் விநியோகம் செய்யும் சிறுமின் விசைப்பம்புகள், விசைப்பம்புகள் மற்றும் இதர உபகரணங்கள் கொள்முதல் செய்வதற்கு, ஆணையாளர் அவர்கள் தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920, விதி–15ன் கீழ் மேற்கொள்வதற்கு 09.03.2019 அன்று அனுமதிக்கப்பட்டுள்ளது.

அதனடிப்படையில், மேற்காணும் குடிநீர் விநியோக உபகரணங்கள் கொள்முதல் செய்வதற்கு, 12.03.2019ல் விலைப்புள்ளிகள் கோரப்பட்டதன் விவரம் பின்வருமாறு

| வ.எ.ண் | பணியின் பெயர் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விகிதம் |
|---|---|---|---|
| 1 | கள்ளக்குறிச்சி நகராட்சிக்கு குடிநீர் விநியோக உபகரணங்கள் கொள்முதல் செய்தல் | திருவாளர்கள்.ரீத்திகா டிரேடர்ஸ், கள்ளக்குறிச்சி | வ.எண்.01 முதல் 11 வரை அனைத்து இனங்களுக்கும் குறைவான விலைப்புள்ளி |
| | | திருவாளர்கள்.ஸ்ரீ விநாயகா எலக்ட்ரிக்கல்ஸ் ஸ்பேர்ஸ் டூல்ஸ், கள்ளக்குறிச்சி | வ.எண்.01 முதல் 11 வரை அனைத்து இனங்களுக்கும் குறைவான விலைப்புள்ளி |
| | | திருவாளர்கள்.சாந்தி எலக்ட்ரிக்கல்ஸ், கள்ளக்குறிச்சி. | வ.எண்.01 முதல் 11 வரை அனைத்து இனங்களுக்கும் குறைவான விலைப்புள்ளி |

மேற்காணும் விலைப்புள்ளிகளில், அனைத்து இனங்களுக்கும் குறைவான விலைப்புள்ளி அளித்துள்ள திருவாளர்கள்.ரீத்திகா டிரேடர்ஸ், கள்ளக்குறிச்சி என்ற நிறுவனத்தாருக்கு, குடிநீர் விநியோக உபகரணங்கள் கொள்முதல் செய்வதற்கு 12.03.2019ல் பணி உத்தரவு வழங்கப்பட்டுள்ளது. மேற்காணும் பணி தற்போது முடிவுற்று பணி முடிக்கப்பட்டு அதற்கான செலவீன பட்டியல் தொகை ரூ.9,20,595/–ஐ மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>

1. அனுமதிக்கலாம்.

**( ந.க.எண். 810 /2019/இ1 )**

## <u>பொருள் எண்-31</u>

விழுப்புரம் மாவட்ட ஆட்சி தலைவர் அவர்களின் கடித ந.க.எண்.பிடி2/6191/2015 நாள்:-15.04.2019 ல் விழுப்புரம் மாவட்டத்தில் உள்ள உள்ளாட்சி அமைப்புகளில் கொள்ளை நோய் மற்றும் டெங்கு காய்ச்சல் பரவாமல் தடுக்கும் பணிக்கு இந்நகராட்சிக்கு 10 நபர்கள் (கொசுபுழு ஒழிப்பு பணியாளர்கள்) தற்காலிகமாக பணிபுரிய உத்தரவிடப்பட்டுள்ளது. எனவே,இந்நகராட்சியில் மேற்கண்ட பணிக்காக 10 நபர்கள் (DBC) பணியாளர்களை ஏற்கனவே பணிபுரிந்த ராசி மகளிர் சுயஉதவி குழு மூலம் 10 நபர்களை தேர்ந்தெடுத்து அவர்களை 10.05.2019 முதல் 60 நாட்கள் பணிபுரியவும், கொசுபுழு ஒழிப்பு பணியாளர்களுக்கு ஒரு நாளைக்கு ரூ.275/- வீதம் ஊதியம் வழங்கிடவும் இதற்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.2.00 லட்சத்திற்கு மேற்கொள்ள மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. பொது சுகாதார அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று பணிகள் மேற்கொண்டதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.
3. பணி பட்டியல் கிடைக்கப்பெற்றவுடன் தொகையினை நகராட்சி பொது நிதியிலிருந்து வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண்.எச்1/1490 /2019)**

**பொருள் எண்-32**

அரசாணை (நிலை) எண். 154, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் எம்.ஏ.5, துறை நாள். 09.08.2010ன்படி இந்நகராட்சி மூன்றாம் நிலை நகராட்சியிலிருந்து முதல் நிலை நகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டு முதல் நிலை நகராட்சிக்கான பணியிடங்கள் ஏதும் நாளது தேதி வரை தோற்றுவிக்கப்படாத நிலையில் சிறப்பு நிலை பேரூராட்சியாக இருந்த காலத்தில் பொறியியல் பிரிவில் 5 பணியிடங்கள் மட்டுமே உள்ளது. இதில் கீழ்க்கண்ட பணியிடங்கள் மட்டுமே அனுமதிக்கப்பட்டுள்ளது.

1. நகராட்சி பொறியாளர் (உ.பொ.நிலை–2) –– 1 எண்ணிக்கை
2. பணி மேற்பார்வையாளர் –– 1 எண்ணிக்கை
3. குடிநீர் மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி காவலர் –– 1 எண்ணிக்கை
4. பணி ஆய்வாளர் –– 1 எண்ணிக்கை
5. குழாய் ஆய்வாளர் (17.01.2013ன்படி) –– 1 எண்ணிக்கை

அரசாணை எண் (நிலை) 4டி–1 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை (எம்.இ–1) நாள். 17.01.2013ன்படி இந்நகராட்சிக்கு பணி ஆய்வாளர் 1 பணியிடம் புதியதாக தோற்றுவிக்கப்பட்டுள்ளது. அரசாணையின்படி இந்நகராட்சிக்கு வேறு பணியிடங்கள் ஏதும் தோற்றுவிக்காத நிலையில் பொதுமக்களின் அடிப்படை தேவைகளான தெருமின் விளக்குகள் பராமரித்தல் மற்றும் குடிநீர் விநியோக திட்ட பராமரிப்பு பணியாளர்கள் ஏதும் இந்நகராட்சிக்கு தோற்றுவிக்கப்படவில்லை.

இந்நகராட்சியில் தெருமின் விளக்கு மற்றும் குடிநீர் திட்ட பணிகள் கீழ்க்கண்டவாறு பராமரிக்கப்பட்டு வருகிறது.

1. இந்நகராட்சியில் பயன்பாட்டில் உள்ள தெருமின் விளக்குகள் விவரம்.

| வ. எண் | விவரம் | எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | தெருமின் விளக்குகள் | 1167 |
| 2. | சோடியம் ஆவி விளக்குகள் | 459 |
| 3. | சி.எப்.எல். | 154 |
| 4. | உயர்மின் கோபுர விளக்கு | 5 |
| **மொத்தம்** | | **1785** |

2. இந்நகராட்சியில் பயன்பாட்டில் உள்ள குடிநீர் பராமரிப்பு பணிகள் விவரம்

| வ. எண் | விவரம் | எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | கேட்வால்வு | 200 |
| 2. | குடிநீர்மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி | 6 |
| 3. | மினிபவர் பம்ப் (2000 லி.) | 283 |
| 4. | கைப்பம்ப் | 15 |
| 5. | அமைக்கப்பட்ட பைப்லைன் (கி.மீ.) | 65.60 |
| 6. | குடிநீர் இணைப்புகள் | 6790 |

இந்நகராட்சி வளர்ந்து வரும் நகராட்சிகளில் ஒன்றாகும். இதன் மக்கள் தொகை 2011ம் ஆண்டு கணக்கெடுப்பின்படி 52507 உள்ளது. இந்நகராட்சியின் பரப்பளவு 15.87 சதுர கிலோ மீட்டர் கொண்ட 21 வார்டுகளை உள்ளடக்கியதாகும். இந்நகரில் 233 தெருக்களும் சுமார் 17417 குடியிருப்புகளும், வர்த்தக நிறுவனங்களும் உள்ளன.

கடந்த 01.09.2005 முதல் இந்நகராட்சி பேரூராட்சியாக செயல்பட்டு வந்த காலத்திலிருந்து நகர்மன்றத்தின் அனுமதி பெற்று தற்காலிகமாக தெருமின் விளக்குகளை பராமரிக்க 5 நபர்களும், குடிநீர் விநியோக பராமரிப்பு பணிக்கு தற்காலிக பயணியாளர்கள் 10 நபர்களை கொண்டு நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண். 1 முதல் 21 வரை உள்ள பகுதியில் தெருமின் விளக்குகள் பராமரிப்பு மற்றும் குடிநீர் விநியோக பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

பொதுமக்களின் அடிப்படை பணிகளாக தெருமின் விளக்கு மற்றும் குடிநீர் திட்ட பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள போதிய பணியாளர்கள் இல்லாத பட்சத்தில் ஆண்கள் சுய உதவிக்குழுக்கள் வழியே 20 நபர்களை நியமனம் செய்து மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் விலை விகிதத்தில் நாள் ஒன்றுக்கு ரூ. 346/– என்ற விலையில் 20 நபர்களை நியமனம் செய்துக்கொள்ளவும், 01.04.2019 முதல் 31.05.2019 வரை இரண்டு மாதங்களுக்குரிய அதற்கான உத்தேச செலவினம் ரூ. 5.00 இலட்சம் நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. ஆண்கள் சுய உதவிக்குழுக்கள் வழியே 20 நபர்களை நியமனம் செய்து மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் விலை விகிதத்தில் நாள் ஒன்றுக்கு ரூ. 346/– வீதம் ஊதியம் வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.
3. பாராளுமன்ற தேர்தல் நன்னடத்தை விதிகள் அமுலில் உள்ள தனி அலுவலரின் முன்அனுமதி பெற்று 05/2019 முதல் தமிழன் ஆடவர் சுய உதவி குழுவின் மூலம் நியமனம் செய்யவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**( ந.க.எண். 3445 / 2019 / இ1 )**